# மாகாணக்கல்வித் திணைக்களம் – வடக்கு மாகாணம்

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2023

| தரம் : 11 | தமிழ்மொழியும் இலக்கியமும் - **III** | நேரம் : 2 மணித்தியாலம் |
|---|---|---|

1. **சுருக்கமான விடை தருக.**

i) **"கொங்கர்க் கமராபதி யளித்த**
**கோவே யிராச குலதிலகா"**

அ) "அமராபதி" என்பதன் பொருள் யாது?

ஆ) **"இராசகுலதிலகா"** என்று அழைக்கப்படுபவர் யார்?

ii) **"ஈமஞ்சேர் மாலை போல் இழிந்திடப்பட்ட செயலாகும்"**

அ) ஈமஞ்சேர் மாலை என்றால் என்ன?

ஆ) இங்கு வந்துள்ள அணி யாது?

iii) **மறையென லறியா மாயமி லாயமொ**
**டுயர் சினை மருதத் துறையுறுத் தாழ்ந்து**

அ) இங்கு "ஆயம்" என்பதன் பொருள் என்ன?

ஆ) "உயர்சினை" என்றால் என்ன?

iv) **"சந்தூக்கின் பின்னால் ஓடிச்சென்றேன்"**

அ) இங்கு சந்தூக்கு என்பது யாது?

ஆ) இங்கு ஓடிச் சென்றவர் யார்?

v) **"அண்ணல் யானை அணிதேர் புரவி**
**ஆட்பெரும் படையொடு"**

அ) அண்ணல் யானை என்பதன் பொருள் என்ன?

ஆ) இங்கு "அணி" என்பதன் பொருள் என்ன?

vi) **"முழங்கு திரைப் புனலருவி கழங்கெழுத் தாடும்"**

அ) "திரை" என்பதன் பொருள் என்ன?

ஆ) இங்கு நீரருவியின் செயல்களாகக் குறிப்பிடப்படுபவை யாவை?

vii) **“கைராசிக்காரி நீங்கள்தான் மாமி, என்ர**

**தலப்புள்ளய ஏந்தணும்”**

அ) இங்கு “மாமி” என்று அழைக்கப்படுவர் யார்?

ஆ) ‘தலப்புள்ளய ஏந்தணும்” என்ற தொடரினால் நீர் விளங்குவது யாது?

viii) என் இதயம் கழன்று

அவன் இட்ட

ஒப்பத்தின் மேல் விழுந்து

கத்தியது.

அ) இங்கு “அவன்” என்று சுட்டப்படுபவன் யார்?

ஆ) இங்கு அவன் இட்ட “ஒப்பம்” எது?

ix) வானத்தைப் பார்த்து - மச்சி வாடுவது என்னத்திற்கோ?

அ) “மச்சி” என்பவர் யார்?

ஆ) இவ்வாறு வினவியவர் யார்?

x) பொரு கொண்டைத் திம்மி கையில்
நாம் இராப் பட்ட பாடு.

அ) “பாடு” என்பதன் பொருள் என்ன?

ஆ) இவ்வாறு பாடியவர் யார்?

(10 x **2** = 20 புள்ளிகள்)

**2. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அதன் கீழ்த்தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

i) ஆற்றோடு ஆற்றுநீர் அலைந்து, வருமாப் போல்

அதன் பிறகே புள்ளுத் தொடர்ந்து வருமாப்போல்

சேற்றோடு வெள்ளம் தெளிந்து வருமாப்போல்

செங்கால் நாரையினம் மேய்ந்து வருமாப் போல்

சினந்தரிவி வெட்டும் இளந்தாரிமாரை

கண்ணூறு படாமற் காரும் ஐயனாரே.

அ) அரிவி வெட்டும் காட்சி எவ்வாறு சிறப்பிக்கப்படுகிறது.

ஆ) வாழ்வியல் நம்பிக்கைகளாகக் குறிப்பிடப்படுபவை எவை?

ii) அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ

தொடித்தலை விழுதண்டூன்றி நடுக்குற்

றிருமிடை மிடந்த சில சொற்

பெருமூ தாளரே மாகிய வெமக்கே.

அ) முதுமையின் வெளிப்பாடுகள் எவை?

ஆ) ஊன்றுகோல் எவ்வாறு வர்ணிக்கப்பட்டுள்ளது?

iii) காத்தி ருந்தவள் போம்வழி முற்றிலும்
கண்கள் பின்னழ கார்ந்து களித்திட
யாத்த தேருருளைப்படு மேழைதான்
யாண்டு தேர் செலு மாங்கிழுப் புற்றெனக்
கோத்த சிந்தையோ டேகி யதில் மகிழ்
கொண்டு நாட்கள் பல கழித் திட்டனன்
பூத்தஜோதி வதனம் திரும்பு மேல்
புலன ழிந்தொரு புத்துயி ரெய்துவேன்

அ) பாரதி, பெண்மீது கொண்ட காதல் உணர்வின் வெளிப்பாட்டினை எழுதுக.

ஆ) உவமை அணி ஒன்றினை இனங்கண்டு எழுதி விளக்குக.

iv) சேர நாட்டிலே பேரியாற்றங்கரையின் இனிய அடைமணற் பரப்பின் மீது சேரன் செங்குட்டுவன் தன் அன்பிற்குரிய வேண்மாளுடன் வீற்றிருக்கின்றான். இளங்கோவடிகளும் சீத்திலைச் சாத்தனாரும் பக்கத்தே உடனிருக்கிறார்கள். கண்ணகிதேவி விண்ணகம் புகுந்த செய்தியினையும் பாண்டிமாதேவி உயிர் துறந்த செய்தியினையும் செங்குட்டுவன் கேள்வியுற்றதுஞ் சிந்தனையில் ஆழ்கின்றான்.

அ) இங்கு குறிப்பிடப்படும் இரு புலவர்களும் யாவர்?

ஆ) சேர நாட்டின் சிறப்புக்களாகக் குறிப்பிடப்படுபவை எவை?

v) அன்றிலிருந்து புகையிலைக் கன்றுக்குப் பாத்தி கட்டுவதைப் போல் கணிப்பொறித் தளத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்து ஒரு பகுதியில் நானும் இன்னொரு பகுதியில் மனைவியும் மீதியில் அரவிந்தனுமாகப் பயிர் செய்தோம். எங்கள் படைப்புக்களை இந்த வரப்புக்குள் வைத்துக் கொண்டோம். ஆரம்பத்தில் எனக்கும் கம்பியூட்டருடன் ஏற்பட்ட பிணக்கு நீங்கி ஓர் இணக்கம் ஏற்பட்டது. அது தன்னிடமுள்ள சூட்சுமத்தை எல்லாம் மெல்ல மெல்ல அவிழ்த்து விடத்தொடங்கியது.

அ) கம்பியூட்டரை இலகுவாகப் பயன்படுத்துவதற்குத் தான் கையாண்ட உத்தியை ஆசிரியர் எவ்வாறு விபரிக்கின்றார்?

ஆ) சூட்சுமம் என்பதன் பொருள் என்ன? இங்கு அதன் பொருத்தப்பாடு யாது?

**(5x4 = 20 புள்ளிகள்)**

3. **கவிஞர் இன்குலாப் எழுதிய "அற்றைத் திங்கள்" என்ற நாடகத்தினை அடிப்படையாகக் கொண்டு,**

அ) போர் நடைபெற்றதற்கான தடயங்கள்

ஆ) பறம்பு மலையின் "அற்றைத் திங்கள்" - நிகழ்வுகள்

என்பன சித்திரிக்கப்பட்டிருக்கும் விதத்தை விளக்குக.

**அல்லது**

முத்தம்மா சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு,

அ) மூத்தம்மாவின் ஆளுமைகள்

ஆ) இஸ்லாமியப் பண்பாடுகள்

வெளிப்பட்டு நிற்கும் பாங்கினைத் தொகுத்துத் தருக.

**(15 புள்ளிகள்)**

4. **திருக்குறளில் பேதைமை எனும் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு,**

அ) பேதைமை என்றால் என்ன?

ஆ) பேதைமையாளனின் இயல்புகள்

என்பவற்றை விளக்குக.

**அல்லது**

**கம்பராமாயணம் எனும் இலக்கியத்தில் குகப்படலத்தை அடிப்படையாகக் கொண்டு,**

அ) பரதனின் பண்புகள்

ஆ) இராமனின் பெருமைகள்

வெளிப்படும் விதத்தினை விபரிக்குக.

**(15 புள்ளிகள்)**

- **5,6,7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்து விடை எழுதுக.**

5. நீதிப் பாடல்களில்,

அ) அடக்கத்தின் மேன்மை (மூதுரை)

ஆ) சிறந்த நட்பு (நாலடியார்)

என்பன எடுத்துக்காட்டப்பட்டிருக்கும் விதத்தை விளக்குக. **(10 புள்ளிகள்)**

6. எது நல்ல சினிமா என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு,

அ) சினிமா மொழி பற்றிய பார்வை

ஆ) படத்தொகுப்பில் கவனிக்க வேண்டியவை

இவற்றினைத் தொகுத்துத் தருக

**(10 புள்ளிகள்)**

7. குற்றாலக் குறவஞ்சி என்னும் சிற்றிலக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு,

அ) இறைவனின் பெருமைகள்,

ஆ) மலைவளச் சிறப்புகள்

வெளிப்படும் முறையினை விளக்குக. **(10 புள்ளிகள்)**